# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 8 DECEMBER இதழ் 12




வெளியிடுவோர்

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

**தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701**

## -: வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :-

"திருமறை ஆசான்" வாசகர்கள் பட்டியலை மாவட்ட வாரியாக ஒழுங்கு படுத்த உள்ளோம். தொடர்ந்து எங்கள் மாத இதழைப் படித்துப் பயன் பெற விரும்புவோர், ஓர் அஞ்சல் அட்டையில் (Post-Card) தெளிவான முகவரியுடன் உங்கள் விருப்பத்தை எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

பதில் வரும் வாசகர்களுக்கு மட்டுமே வரும் புத்தாண்டிலிருந்து "திருமறை ஆசான்" அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்

## ஆசானின் அறிவுரையிலே


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | "…. கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்" | 1 |
| 2. | அற்புத சுகமளித்தல் | 8 |
| 3. | பெண்கள் பகுதி | 14 |
| 4. | புதிய ஏற்பாட்டு ஆராதனை (5) | 19 |
| 5. | "சாத்தானுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே?" | 22 |
| 6. | குற்றங் கண்டுபிடித்தல் என்னும் பாவம் | 25 |
| 7. | யெகோவா சாட்சிகள் *(10) | 30 |

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 8 DECEMBER ISSUE -12


## ஆசிரியவுரை

# "...... கிறிஸ்துவுக்காக நஷ்ட மென்று எண்ணினேன்"

பரிசுத்த : வேதாகமத்தில் உள்ள இரு பெரும் பிரிவுகளில் ஒன்றான புதிய ஏற்பாட்டில், நமதாண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவுக்கடுத்த படியாய் தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்துள்ளவர் அப்போஸ் தலனாகிய பவுலடியார். அவரைப் பற்றி அறியாத கிறிஸ்தவர்கள் ஒருவர்கூட இருக்க நியாயமில்லை. ஒருவேளை இருந்தால், அவர்கள் கிறிஸ்தவர்களே அல்ல என்று கூடச் சொல்லலாம். அப்போஸ் தலர்களின் வரிசையில் கடைசியில் வந்தாலும், தன்னுடைய வைராக்கியமான ஊழியத்தாலும், தளராத உழைப்பாலும், தன்னலமற்ற தியாகத்தாலும், அனல் தெறிக்கும் பேச்சாலும், வல்லமையான எழுத்துக்களாலும் முதலிடத்தைப்பிடித்தவர். இவரை நினைக்கும் பொழுதெல்லாம் உள்ளத்தில் பேரானந்தம் பொங்கி எழும்.

இம்மகா மனிதர், புதிய ஏற்பாட்டில் 14 நிருபங்களை எழுதியுள்ளார். இவர் எப்படிப்பட்டவர் என்பதற்கு சான்று பகர இது ஒன்றே போதும். இப்பதினான்கில் எபேசியர், பிலிப்பியர், கொலொசேயர், பிலேமோன் ஆகியன விசேஷமானவை. பவுலடியார் ஊழியத்திலிருந்தும் ரோமச் சிறைச்சாலையில் அடைபட்டிருந்த நாட்களில் இவைகளை எழுதினபடியால் இவைகளைச் "சிறை நிருபங்கள்" என்று சொல்வதுண்டு. இந்த நான்கில் விசேஷமானது, பிலிப்பியர்.

ஏனெனில் கிறிஸ்துவுக்குள் தான் உண்மையான மகிழ்ச்சி சாத்தியம் என்பதை வலியுறுத்தி எழுதியுள்ளதால் இதை "மகிழ்ச்சியின் நிருபம்" என்றும் அழைப்பதுண்டு. தன்னுடைய சரீரக் குறைவில் தாராளமாய் உதவின சபையாருக்கு, நெஞ்சார்ந்த நன்றிகளைச் சொல்லி இப்புத்தகம் முடிவதால், இந்நிருபத்தை "நன்றியின் நிருபம்" என்று சொல்லவும் வாய்ப்புண்டு.

சரி, இச்சிறப்புமிக்க நிருபத்தின் மூன்றாம் அதிகாரத்தின் ஏழாம் வசனம்தான் நமது ஆராய்ச்சிக்குரிய பகுதி. **"ஆகிலும் எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்" (3:7)**

இந்த மூன்றாம் அதிகாரம், அப்போஸ்தல உபதேசத்திற்கு மாறாகப் போதிக்கும் யூதமத போதகர்களைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள் என்று எச்சரித்து ஆரம்பாகிறது. குறிப்பாக விருத்தசேதனம் முக்கியப்பங்கு வகிக்கிறது. விருத்தசேதனத்தை மாம்சப்பிரகாரமான முறையில் இனிமேல் கடைப்பிடிக்க வேண்டிய தேவையில்லை என்பதே அவர் வைக்கும் வாதம். "ஏனெனில், மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்" (3:3)

மேலும், நான் ஆபிரகாமின் சந்ததி, தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரவேலன், பிரமாணங்கள் எங்களுக்குச் சொந்தம், வாக்குத்தத்தங்கள் எங்களுக்கு உண்டு என்றெல்லாம் இனிப் பேசித் திரிவது அவசியமில்லாதது. அதினால் பயனேதுமில்லை, அவைகள் முடிந்து போய்விட்டது. அவைகளைப் பேசி, கைக்கொண்டு கிறிஸ்துவின் உபதேசத்தை அவமாக்க வேண்டாம் என வலியுறுத்துகிறார். ஒருவேளை யாராவது மாம்சரீதியான பெருமைகளைப் பேச விரும்பினால், நான் பேசுவதற்கு அதைவிட ஏராளம் உண்டு என ஒரு அழகான பட்டியலைத் திரையிட்டுக் காட்டுகிறார். **"நான் எட்டாம் நாளில் விருத்தசேதனமடைந்தவன், இஸ்ரவேல் வம்சத்தான் பென்யமீன் கோத்திரத்தான், எபிரேயரில் பிறந்த எபிரேயன், நியாயப் பிரமாணத்தின்படி பரிசேயன், பக்தி வைராக்கியத்தின்படி சபையைத் துன்படுத்தினவன். நியாயப் பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்"** (3:5, 6)

இவ்வசனப்பகுதியில், ஒரு நல்ல யூதனுக்கு உண்மையாகவே பெருமைகளையும், சிலாக்கியங்களையும் தரக்கூடிய ஏழு காரியங்களை எடுத்துச்சொல்லிவிட்டு"... கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்" (3:8) என்று கூறுகிறார்.

தனக்குப் பெருமை தந்த காரியங்களென்று அவர் வரிசைப் படுத்தியவைகளை கொஞ்சம் விபரமாகப் பார்ப்போம்.

## 1. எட்டாம் நாளில் விருத்தசேதனமடைந்தவன் :

"விருத்தசேதனம்" என்பது தேவன் ஆபிரகாமோடே செய்து கொண்ட ஒரு உடன்படிக்கை. (ஆதி. 17:12). அவ்வுடன்படிக்கையின் படி ஆபிரகாமின் சந்ததியில் பிறக்கும் ஒவ்வொரு ஆண் பிள்ளையும் எட்டாம் நாளில் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும். பக்தியுள்ள யூதப் பெற்றோர்களும் யூத மார்க்கத்தில் நம்பிக்கையுள்ளவர்களும், தங்கள் ஆண் பிள்ளைகளுக்கு எட்டாம் நாளில் விருத்தசேதனம் செய்யத் தவறமாட்டார்கள். எந்தத் தடங்கலுமின்றி எட்டாம் நாளில் விருத்தசேதனம் பெற்றுக் கொள்வது சிலாக்கியத்திற்குரிய பெருமைக்குரிய ஒரு காரியம்.

ஆனால், இந்த உடன்படிக்கை ஏற்பட்டபொழுது இஸ்மவேலுக்குப் 13 வயதாயிருந்தபடியால், தன்னுடைய 13-வது வயதில் விருத்தசேதனம் செய்யப்பட்டான். ஆகையால், அவனுடைய சந்தியார் 13-ம் வயதில் விருத்தசேதனம் பெறுவது தான் வழக்கம். மேலும் பிற மார்க்கத்திலிருந்து யூத மார்க்கத்தைத் தழுவிக் கொள்கிறவர்கள். தாங்கள் எந்த வயதில் யூதமார்க்கத்தைத் தழுவிக் கொள்கிறார்களோ அந்த வயதில் விருத்தசேதனம் அடைவர். மற்றும் சில சந்தர்ப்பங்களில் பிறந்த குழந்தைகள் நோய்வாய்ப்படும்போது விருத்தசேதனம் தள்ளிப் போடப்பட்டு பின்னாளில் செய்யப்படுவதும் உண்டு.

எப்படியிருந்தாலும் தங்களுடைய மதச் சடங்குகளை ஏற்ற சமயத்தில் முடிப்பதுதான் ஒரு யூதனுக்குப் பெருமை தரக்கூடியது. விருத்தசேதன காரியத்தில் அப்படிப்பட்ட சிலாக்கியமும், பெருமையும் தனக்குச் சொந்தம் என இங்கே எடுத்துச் சொல்கிறார்.

## 2. இஸ்ரவேல் வம்சத்தான் :

யாக்கோபின் வம்சத்தார் எல்லோருமே இஸ்ரவேல் வம்சத்தாரே. ஆனாலும், யாக்கோபின் குமாரர்களுக்குள் தங்களுடைய தாய், யார்

என்கிற விஷயத்தில் கொஞ்சம் பெருமையான எண்ணம் இருந்தது. தான் அதிகாரப் பூர்வமான மனைவிக்குப் பிறந்தவனா? அல்லது மறுமனையாட்டியின் மகனா? என்பதே அது, அதாவது, தன்னுடைய கோத்திரப் பிதாவான பென்யமீன், யாக்கோபின் அதிகாரப்பூர்வமான மனைவியான ராகேலுக்குப் பிறந்தவன் என்று பெருமையோடு சொல்லி, தன்னுடைய வம்சம் சுத்தமானது எனப் பறைசாற்றுகிறார்.

## 3. பென்யமீன் கோத்திரத்தான் :

பென்யமீன் கோத்திரம் என்பது இஸ்ரவேல் சரித்திரத்தில் மரியாதைக்குரியது. ஏனெனில் இஸ்ரவேலை ஆளும் முதல் ராஜாவை தேவன் இந்தக் கோத்திரத்திலிருந்து தான் தெரிந்தெடுத்தார். அது முதல் இக்கோத்திரத்தாருக்குத் தாங்கள் "ராஜ வம்சத்தார்" என்ற நினைப்பு இருந்தது.

மாத்திரமல்ல, கோத்திரங்கள் பிரிக்கப்பட்டதிலும், இவர்கள் அதிர்ஷ்டசாலிகளாக இருந்தனர். ஏனெனில் இன்றைக்கும் உலகின் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கும் எருசேலம் பட்டணமும், சாலமோன் ராஜாவைக் கொண்டு தேவன் கட்டின ஆலயமும் இவர்கள் மண்ணில் தான் இருந்தது. இது போதாதா இவர்கள் பெருமைக்கு.

## 4. எபிரேயரில் பிறந்த எபிரேயன்

தன்னுடைய தாயும் தகப்பனும் எபிரேயர்கள் என்று சொல்லி தன் வம்ச சுத்தத்தை வெளிக்காட்டுகிறார். அதாவது, என் பெற்றோர்கள் சரியான யூதர்கள், அவர்கள் யூத மார்க்கத்தமைந்தவர்களல்ல என்கிறார். தன்னுடைய பெற்றோரின் பெற்றோரும், முன்னோர்களும் எபிரேயர்களே என்றும், தன்னுடைய நாடி நரம்புகளில் ஓடும் இரத்தம் எபிரேய இரத்தமே என்கிறார்.

இவனுடைய பெற்றோர் இவனை, தர்சுப்பட்டணத்திலிருந்து எருசேலமிலுள்ள கமாலியேலிடத்தில் கல்வி கற்க அனுப்பியதிலிருந்து ஒரு உண்மை புலனாகிறது. இவர்கள் எவ்வளவு கண்டிப்பான யூதர்களாக, எபிரேயர்களாக இருந்துள்ளனர் என்று.

## 5. நியாயப் பிரமாணத்தின்படி பரிசேயன் :

யூத மார்க்கத்திலிருந்த நான்கு பிரிவுகளில் பரிசேயர்கள் சிறப்பானவர்கள். முழுக்க முழுக்க மதவாதிகள். அரசியல் போன்றவற்றில் நாட்டம் இல்லாதவர்கள். மோசேயின் பிரமாணத்தை அட்சரம் பிசகாமல் கடைப்பிடிக்க வேண்டுமென்று சுத்தமாகக்

கூறுபவர்கள். நமதாண்டவரின் ஊழிய நாட்களில், மோசேயின் பிரமாணத்தை இவன் மீறுகிறான் என்று அடிக்கடி குற்றஞ்சாட்டியவர்கள் இவர்களே.

மோசேயின் பிரமாணத்தில் பரிசேயர்கள் பிடிப்பு எப்படியிருந்தது என்பதை பவுலே வாக்குமூலம் கொடுக்கிறார். ஆம், ஒருசமயம் விசாரணைக் கைதியாய், அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக நின்றபோது இவ்விதம் கூறுகிறார். **"நம்முடைய மார்க்கத்திலுள்ள சமய பேதங்களில் மிகவும் கண்டிப்பான சமயத்துக்கு இசைந்தபடி பரிசேயனாய் நடந்தேனென்று சாட்சி சொல்ல அவர்களுக்கு மனதிருந்தால் சொல்லலாம்." (அப். 26:5)** என்கிறார்.

அதாவது, மோசேயின் பிரமாணம் என் உயிர் மூச்சாக இருந்தது. நீங்கள் நினைப்பது போல் அவைகளை நான் அற்பமாக எண்ணவில்லையென்றுரைக்கிறார்.

## 6. பக்தி வைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன் :

பரிசேயர்களைப் போல் ஊருக்கு உபதேசித்துவிட்டு, உள்ளூர அவைகளைப் பற்றிய அக்கறையில்லாமல் நானிருக்கவில்லை. நான் அப்பிரமாணங்களின்பால் ஆழமான பக்தி கொண்டிருந்தேன். அதாவது, மோசேயின் பிரமாணத்தை எதிர்ப்பவர்களுக்கு நான் சிம்ம சொப்பனமாக இருந்தேன் என்கிறார்.

சவுலாக இருந்த பவுலின் பக்தி வைராக்கியத்தை லூக்க ஆசிரியர் இவ்விதம் குறிக்கிறார். "சவுல் என்பவன் இன்னும் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய் இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் நான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டு வரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்" (அப். 9:1, 2)

ஒரு கொள்கையில், பிரமாணத்தில் தனக்கு இருக்கும் பிடிப்பை, பக்தியை, பக்தி வைராக்கியத்தை இதைவிடச் சிறப்பாக யாராலும் வெளிக்காட்ட முடியாது.

## 7. நியாயப் பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றம் சாட்டப்படாதவன் :

கிறிஸ்துவின் உபதேசத்தை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திராமல் மோசேயின் நியாயப் பிரமாணத்திற்கு மாறிக் கொண்டிருந்த கலாத்தியா பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்குப் பவுலடியார் சொல்வதைக் கவனியுங்கள். "என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப் பார்க்கிலும் யூத மார்க்கத்திலே தேறினவனாய், என் பிதாக்களுடைய பாரம்பரிய நியாங்களுக்காக மிகவும் பக்தி வைராக்கியமுள்ளவனாயிருந்தேன்" (கலா. 1:16)

நான் குற்றமில்லாதவன் என்று சொல்வதற்கும், நான் குற்றம் சாட்டப்படாதவன் என்று சொல்வதற்கும் மலைக்கும்; மடுவுக்கும் உள்ள வித்தியாசம் உண்டு. நான் குற்றம் இல்லாதவன் என்று யார் வேண்டுமானாலும் சொல்ல முடியும். ஆனால் நான் குற்றம் சாட்டப்படாதவன் என்று சொல்ல எல்லோராலும் முடியாது. வெகு சிலர் தான் தங்கள் வாழ்நாளில் அத்தகுதியைப் பெறுகின்றனர். மோசேயின் பிரமாணத்தைப் பொறுத்தளவில் பவுல் இப்படிச் சொல்கிறாரென்றால் எந்தளவுக்கு அப்பிரமாணத்திற்கு உண்மை யுள்ளவராக இருந்துள்ளார் என்பதை ஊகித்துக் கொள்ளுங்கள்.

கொள்கைப் பிடிப்பு என்பது பவுலடியாருக்கு உடன் பிறந்த குணங்களில் ஒன்றாக இருந்துள்ளது. பழைய பிரமாணத்திலிருந்த போதும் சரி, புதிய பிரமாணத்தை ஏற்றுக் கொண்ட பின்பும் சரி அதுதான் அவருடைய நிலை. ஏனெனில் எந்தவொரு அப்போஸ் தலனும் சொல்ல முடியாததை பவுல் துணிந்து சொல்லியிருக்கிறார். **"நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" என்று (I கொரி. 11:11)**

நீங்களும், நானும், கிறிஸ்துவின் உபதேசத்தைப் பொறுத்தமட்டில் என்னை யாரும் குற்றஞ்சாட்ட முடியாது என்று சொல்ல முடியுமா?

சரி, வருடத்தின் விளிம்பில் நாம் நின்று கொண்டுள்ளோம். இன்னும் ஒருசில நாட்களே எஞ்சி நிற்கிறது. கர்த்தர் அனுமதி கொடுத்தால் புதிய வருடத்திற்குள் ஆரவாரத்தோடு பிரவேசிக்க ஆயத்தமாகிக் கொண்டுள்ளோம். கடந்த வருடத்தில் நம்முடைய வாழ்க்கை எப்படியிருந்ததென்று அலசிப்பார்க்க இதைவிடச் சரியான சந்தர்ப்பம் இருக்க முடியாது. குறிப்பாக, கிறிஸ்துவோடும், அவருடைய உபதேசத்தோடும் நம்முடைய தொடர்பு எவ்வாறிருந்தது என்று திரும்பிப் பார்ப்பது அவசியம்.

எவ்வளவோ சத்தியங்களை தேவதாசர்கள் மூலம் கேட்டோம். எத்தனையோ தேவ செய்திகளைப் பத்திரிக்கையின் மூலம் படித்தோம். சத்தியம் காட்டும் சபை எது என்றும், வேதம் சொல்லும் உபதேசம் எது என்றும் ஆராய்ந்தோம். எத்தனையோ பேருக்குக் கிடைக்காத இந்த மாபெரும் ஆசீர்வாதத்தை தேவன் நமக்குத் தந்தார். ஆனால், நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்?

கிறிஸ்துவின் உபதேசம் தான் சிறந்தது, கிறிஸ்துவின் சபைதான் சிறந்தது என்று தெரிந்தவுடன், தனக்குப் பெருமையாயிருந்த அநேகக் காரியங்களை அப்போஸ்தலன் பவுல் தூக்கியெறிந்து விட்டார் என்று பார்த்தோம். தன்னுடைய பெருமையும், தன்னுடைய லாபமும் தனக்கு முக்கியமல்ல. மாறாக கிறிஸ்துவின் நிமித்தம் வரும் நஷ்டமே தனக்கு மேல் என எண்ணினாரே, பார்த்தீர்களா?

நம்முடைய நிலை எப்படி? "எப்போதும் கற்றாலும், ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற. . . " (II தீமுத். 3:7) மக்களாக உள்ளோமா? அல்லது கிறிஸ்துவுக்காக, அவருடைய சபைக்காக எதை வேண்டுமானாலும் விடத் தயாராக உள்ளோமா? சிந்திப்போம்!

நம்முடைய குடும்பம் பின்னணியும், சபைப் பாரம்பரியமும், தேவையில்லாத சில ஆசாரங்களும், பண்டிகைகளும், உலகப் பிரகாரமாகக் கிடைக்கும் பெருமையும், சமுதாய அந்தஸ்தும் நமக்குப் பெரிதாகத் தெரிகிறதா? ஒருவேளை அதுதான் காரணம் என்றால் ஜெபத்தோடு ஒரு கணம் பவுலை நினைத்துப் பாருங்கள். பவுலுக்கிருந்த தடைகளை நீக்கி, அவனைத் தனக்காகத் தெரிந்து கொண்ட தேவன் உங்களுக்கிருக்கும் தடைகளையும் நீக்குவார்.

கிறிஸ்துவுக்காக எதையுமே நஷ்டமென்று விடாமல் வேதம் சொல்லும் கிறிஸ்தவனாக ஜீவிக்க முடியாது. ஒருவேளை உலகம் போற்றும் கிறிஸ்தவனாக இருக்கலாம். அதில் பிரயோஜனமேது மில்லை.

அன்பரே! நண்பரே! பழைய ஆண்டு முடிகிறது. நாம் கனிகொடுக்கும்படியாய் ஒரு புதிய ஆண்டு கூட்டிக் கொடுக்கப்படுகிறது. கனிகொடுக்கப்போகிறோமா? ஆம், நான் கனி கொடுக்கப்போகிறேன் என்று தீர்மானிப்போம். "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" (பிலிப். 1:21) எனச் சொல்லி புத்தாண்டில் கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வு வாழ தேவன் நமக்கு அனுக்கிரகம் செய்வாராக!

அனைவருக்கும் எனது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

**E.Z.S. ராஜநாயகம்**

# அற்புத சுகமளித்தல்

கிறிஸ்துவின் நாமத்தினாலே இன்றும் அற்புதங்கள் செய்யப்பட்டு வருகின்றன என கிறிஸ்துவை விசுவாசிக்கும் பெரும்பாலான மக்களிடையே வெகு சாதாரணமாகப் போதிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு போதிப்பவர்களும், முன்னோடியாக நின்று இச்செய்களை நடத்துவோரும் பொதுவாக மிகவும் உணர்ச்சி வசப்படுபவர்களாகவும், கிறிஸ்து செய்த சகல அற்புதங்களையும், அற்புதங்களைப் பற்றிச் சொல்லப்படும் சகல வசனங்களையும் பட்டியலிட்டுக் காட்டுபவர்களாகவும் உள்ளனர். "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகயிருக்கிறார்" என்றும் எபிரேயர் 13:8-ம் வசனத்தையும் அவர்கள் குறிப்பிடத்தவறுவதில்லை. அந்த வசனம் உண்மைதான். ஆனால் இன்று இயேசு அற்புதங்களைச் செய்து கொண்டிருக்கிறார் என்று அது சொல்லவில்லை. முதல் ஆணும் பெண்ணும் ஒரு அற்புதத்தால் உண்டாக்கப்பட்டனர். ஆதியாகமம் 1:26, 27 வசனங்களின்படி, அந்த உற்பத்திக்கு கிறிஸ்து ஒரு காரணமாக இருந்தார். ஆனால் இன்று அப்படிச் செய்யவில்லையே? எனவே, ஒரு வசனத்தை எடுத்துக்கொண்டு, நமக்குத் தேவையானதை அது கற்பிக்க வேண்டுமென்ற நமது விருப்பத்தின் காரணமாகி, அது அவ்வாறு கற்பிக்கிறது எனக் கூற முயற்சிப்பது சரியல்ல. மாறாக, அற்புதங்களைச் செய்தது யார்? அவற்றைச் செய்ய வேண்டிய அவசியம் என்ன? இன்றும் அற்புதங்கள் நடக்க வேண்டுமென்பது கர்த்தரின் எண்ணமா? - இப்படிப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் நாம் விடைகாணவேண்டும்.

மீண்டும், இன்றைய நாட்களிலும் அற்புதங்கள் நடைபெறுகின்றன எனப் போதிப்பவர்கள், வியாதிக்காரர்கள், உடல் ஊனமுற்றோர்கள், மரணப்படுக்கையிலிருப்போர், இன்னும் இப்படிப்பட்டவர்கள், அவர்கள் உயிர் வாழ அல்லது உதவிகள் கிடைக்க ஒரே வழி, ஒருவேளை, ஒரு அற்புதத்தினால் மட்டுமே என அவர்கள் நம்பும்படியாக உணர்ச்சி பூர்வமான வேண்டுகோள் விடுகின்றனர். பல போதகர்கள் இதே போன்ற முறையைப் பின்பற்றி புகழும் பணமும் சேர்த்திருக்கின்றனர். நோயாளிகளும், ஊனமுற்றோரும், துன்பப்படுவோரும் இயேசுவை மட்டுமே நம்பினால் போதும், அவர்கள் வாழ்விலும் அற்புதங்கள் நடைபெறும் என்று, அநேகமாக, அவர்களின் பிரசங்கம் முழுவதும் இயேசு செய்த அற்புதங்களைப்

பற்றியே தான் இருக்கிறது. என்ற போதிலும், மருத்துவமனைகள் வியாதிக்காரர்களால் நிரம்பி வழிகின்றன; அறுவை சிகிட்ச்சைகள் தொடருகின்றன; மனிதனுடைய நோய் நீக்கும் மருந்துகள் உலக முழுவதும் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு விற்றுக் கொண்டுதான் இருக்கின்றன; எல்லாவற்றிற்கும் மேலாக, மக்களும் தொடர்ந்து மரணமடைந்து கொண்டுதான் இருக்கின்றனர். இயேசுவின் காலத்தைப் போல இன்றும் அற்புதங்கள் தொடர்ந்தால், அடிப்படையில் இவை அனைத்தும் மாறியிருக்க வேண்டுமே!

ஆனால், இயேசு அற்புதங்களைச் செய்த போதிலும், இயேசுவின் நாட்களில் இருந்த் வியாதிகள், நோய்கள், மரணங்கள், அனைத்தும் மறைந்து போய் விடவில்லையே? ஆனால் நாம் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், அவர் இந்த வியாதிகளை எல்லாம் சுகப்படுத்த இங்கு வரவில்லை. எல்லா உடல் ஊனமுற்றவர்களை சீராக்கவும், எல்லா குருடர்களுக்குப் பார்வையளிக்கவும், சகல செவிடர்களுக்கும் காது கேட்கவும், மரித்தோர் அனைவரையும் உயிரோடு எழுப்பவும் அவர் வரவில்லை. அவர் அந்தக் காரியங்களுக்காக வந்திருப்பாரேயானால், அவை அனைத்தையும் செய்திருப்பார். ஆனால் அவர் இழந்ததை தேடவும் இரட்சிக்கவும் தான் வந்தார். (லூக்கா 19:10) தாம் தேவனால் அனுப்பட்டவர் என்றும், உண்மையில் தாம் தேவனுடைய குமாரன் என்றும் மக்களை நம்பச் செய்யவே அவர் அற்புதங்களைச் செய்தாரே ஒழிய, மக்களை சுகப்படுத்துவதற்காக மட்டும் அல்ல. அவர் செய்த அற்புதங்களைக் கண்ட மக்கள் அவரை விசுவாசித்தார்கள் என்பது மீண்டும், மீண்டுமாக வலியுறுத்தப்பட்டிருப்பதை நீங்கள் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியோர் எழுதிய சுவிசேஷத்தைப் புதிய ஏற்பாட்டில் நீங்கள் படித்தால் அறிய முடியும். உதாரணமாக, "பஸ்கா பண்டிகையிலே அவர் எருசலேமிலிருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள்" என யோவான் 2:23ம் வசனத்தில் படிக்கிறோம். அடுத்து யோவான் எழுதும் போது, "இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேது தமது சீடருக்கு முன்பாகச் செய்தார். இயேது தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப் பட்டிருக்கிறது" (யோவான் 20:30, 31) என்றார். எனவே விசுவாசிகளை உண்டாக்கவே இயேசு அற்புதங்களைச் செய்தார். சுகமடைந்தவர்கள் சரீரத்தில் பலனடைந்தார் என்பது உண்மையே.

ஆனால் அவர் அவர்களை சுகப்படுத்த வேண்டிய உண்மையான காரணம் அதுவல்ல. அந்த அற்புதங்களைக் கண்ட சாட்சிகளிலிருந்து விசுவாசிகளை உண்டாக்குவதே உண்மையான காரணமாகும். சுகமாக்க வேண்டும் என்பதற்காக மட்டுமே இயேசு வியாதிக்காரர்களை சுகப்படுத்தினார் என்பது போன்ற அபிப்பிராயத்தை இன்றைய விசுவாச சுகமளிப்போர் ஏற்படுத்துகின்றனர். அவர்களின் கூற்றுப்படி பார்த்தால், இன்று யாருமே வியாதிக்காரனாக இருக்கக்கூடாது; அல்லது யாரும் மரிக்கக் கூடாது. அப்படியே மரித்துப் போனாலும் அவர்களை எழுப்பி விட முடியும். ஆனால் வேடிக்கை என்ன வென்றால், அவர்களின் இந்த உரிமைகளை எல்லாம் மீறி, காரியங்கள் எப்போதும் போல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த அற்புத சுகமளிப்பவர்கள் தவற விட்டு விட்ட சில அருமையான சந்தர்ப்பங்களை நான் உங்களுக்கு காட்டக் கூடும்; உதாரணமாக, திருமதி இந்திரா காந்தி அவர்கள் கொலை செய்யப்பட்டபோது, இந்த சுகமளிப்பவர்களில் எவராவது அங்கு சென்று அவரை உயிரோடு எழுப்பியிருக்கலாமே? அமெரிக்க நாட்டு ஜனாதிபதி ஜான் F. கென்னடி அவர்கள் சுடப்பட்டபோது ஒரல் ராபர்ட் போன்றவர்கள் அங்கு சென்று ஜெபம் செய்து அவரை ஏன் எழுப்பவில்லை? சந்தேகமின்றி, அநேக சந்தர்ப்பங்களை இவர்கள் தவற விட்டிருக்கின்றனர். ஆனால் இந்த உலகத்தலைவர்களைப் பற்றி ஏன் குறிப்பிடுகிறோம்? ஏனெனில், இவர்களை எழுப்பியிருந்தால், அற்புதங்களுக்கு சாதகமாகக் கிடைத்திருக்கக் கூடிய பெரிய விளம்பரத்தை நினைத்துப் பாருங்கள். இப்படிப்பட்ட அற்புதங்களால் உலகின் பல பகுதியிலுமுள்ள மக்களும் கிறிஸ்துவை விசுவாசித்திருப்பர். ஆனால் அவர்கள் இந்தத் தலைவர்களை உயிரோடு எழுப்ப ஏன் முயற்சிக்கவில்லை என்று உங்களுக்குத் தெரியுமா? ஏனென்றால், அப்படிச் செய்ய அவர்களால் முடியாது என்பதே காரணம். அவ்வாறு அவர்கள் செய்ய வேண்டுமென்பது கர்த்தரின் விருப்பமும் அல்ல. சந்தேகமின்றி, சகலவிதமான நொண்டிச் சாக்குகளையும் அவர்கள் சொல்லுவார்கள். தாங்கள் அற்புதங்களைச் செய்யவில்லை, கிறிஸ்துவே அவற்றைச் செய்கிறார் என்று கூறுவர். ஆம், கிறிஸ்து அவர்கள் மூலமாக கிரியை செய்வதாக அவர்கள் கூறுவர். கர்த்தரை அது சோதிப்பதாக இருக்கும் என்பர். கர்த்தர் அவர்கள் மூலமாக செயல்பட்டால், அது உலக முழுவதும் விசுவாசிகளை உண்டாக்க காரணமாக இருக்கும் என்றால், பின் அது கர்த்தரை சோதிப்பதாக ஏன் இருக்க வேண்டும்? மீண்டுமாக,

இவர்களால் எந்த அற்புதத்தையும் செய்ய இயலாது. அது அவர்களுக்கும் தெரியும்.

முதுகு வலிகள், இருதய வலிகள், தலை வலிகள், காய்ச்சல், இன்னும் இது போன்ற பல வியாதிகளை அவர்கள் சுகப்படுத்துவதாக சவால் விடுகின்றனர். ஆனால், உங்களுடைய மருத்துவரிடம் கேட்டால், இப்படிப்பட்ட பல வியாதிகள் உங்கள் மனத்தளவிலே இருப்பதாக அவர் கூறுவார். மேலும் இவ்வாறான சிறு நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள், இவற்றை அற்புதமாக சுகப்படுத்துவதாக சவால் விடுபவர்களை தீவிரமாக நம்பும் போது இந்நோய்கள் சுகமாகின்றன. ஆனால், கால், கண், கை இல்லாமல் அவதியுறும் ஊனமுற்ற சிலருக்கு அவற்றையெல்லாம் இவர்கள் கொடுக்கப் போவதைக் காண நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம்! இப்படிப்பட்ட அற்புதங்களை இவர்கள் செய்ய ஆரம்பித்தால், இன்னும் பல மக்கள் இவர்கள் சொல்லிக் கொண்டிருப்பதைக் கவனிக்கத் தொடங்குவர்.

ஆனால் அற்புதம் என்றால் என்ன? இயற்கையின் விதிக்கு மாறாகச் செய்யப்படும் ஒரு செயல் என இதற்கு யாரோ விளக்கம் அளித்திருக்கின்றனர். அதாவது, ஒன்றுமில்லாமையிலிருந்து ஏதாவது உண்டாக்குவது, அல்லது கை, கால் இழந்த மனிதனுக்கு புது கை அல்லது காலை அளித்தல், மரித்தவனை உயிரோடு எழுப்புதல். இது போன்றவற்றைச் செய்தல். அற்புதம் என்பது நாம் புரிந்து கொள்ள முடியாதது அல்ல. பல காரியங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை நாம் புரிந்து கொள்வதில்லை. ஆனாலும் அவை இயற்கையின் சட்டத்தின்படி அல்லது மனிதன் உண்டாக்கிய ஒரு திட்டத்தின்படியோ, ஒரு நியமத்தின்படியோ நடக்கின்றன.

புதிய ஏற்பாட்டில், கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும், அவர்கள் யார் மேல் கைகளை வைத்தார்களோ அவர்களும் மட்டுமே அற்புதங்களைச் செய்யக் கூடியவர்களாக இருந்தனர். நாம் ஏற்கனவே குறிப்பிட்டப்படி, விசுவாசிகளை உண்டாக்குவதற்காக அவர்கள் அப்படிச் செய்தனர். இது புதிய ஏற்பாடு எழுத்து வடிவில் கிடைக்கப்படுவதற்கு முன்பு நடைபெற்றது. புதிய ஏற்பாடு பூரணமாக எழுதப்பட்டு மனிதருக்குக் கிடைத்தபின், அற்புத யுகம் முடிவுற்றது. நமது இருதயத்தில் விசுவாசத்தை உருவாக்க இனி நமக்கு அற்புதங்கள் தேவையில்லை. "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என பவுல் கூறினார். (ரோமர் 10:17). கர்த்தர் தமது வசனத்தில் கூறியிருப்பதை நீங்கள்

நம்பாவிட்டால், நீங்கள் ஒரு அற்புதத்தைக்கண்டாலும் நம்பப் போவதில்லை.

கர்த்தர் இனிமேல் அவரோ அல்லது அவருடைய ஊழியர்கள் மூலமோ அற்புதங்களைச் செய்ய இயலாது என்பது அல்ல; அவர் வல்லமையை இழந்து விடவில்லை;, அல்லது அவருடைய மக்கள் வல்லமையற்றுப் போகவில்லை. உண்மை என்னவென்றால், கர்த்தரும் அவருடைய மக்களும் எப்போதும் போல வல்லமையுள்ளவர்களாகவே இருக்கின்றனர். காரியங்களைச் செய்ய, கர்த்தர் ஒரு வித்தியாசமான வழியை, உண்மையில் ஒரு அதி சிறப்பான வழியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். அற்புதங்கள், அடையாளங்கள், அதிசயமான செயல்கள் அனைத்தும் தற்காலிகமானதாக மட்டுமே இருந்தன; அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே இருந்தன. இன்று நாம் அவற்றைச் சார்ந்திருக்கத் தேவையில்லை. ஏனெனில், இப்போது நாம் படிக்கவும், கற்றுக் கொள்ளவும், விசுவாசிக்கவும், கீழ்ப்படியவும் தேவனுடைய வார்த்தை நமக்குக் கிடைத்துள்ளது. நாம் அவ்வாறு செய்யும்போது கர்த்தர் நம்மை இரட்சிக்கிறார், நம்மை ஆசீர்வதிக்கிறார். நாம் வேறு என்ன கேட்க வேண்டும்?

J.C. சோட்

## -: வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :-

"திருமறை ஆசான்" வாசகர்கள் பட்டியலை மாவட்ட வாரியாக ஒழுங்கு படுத்தும் பணி நடந்து கொண்டுள்ளது. தொடர்ந்து எங்கள் மாத இதழைப் படித்துப் பயன் பெற விரும்புவோர், ஓர் அஞ்சல் அட்டையில் (Post-Card) தெளிவான முகவரியுடன் உங்கள் விருப்பத்தை எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

பதில் வரும் வாசகர்களுக்கு மட்டுமே வரும் புத்தாண்டிலிருந்து "திருமறை ஆசான்" அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்

# WORLD VIDEO BIBLE COLLEGE

***Applications are invited from Committed young men for full time Bible Training***

**Duration** : 3 years (Semester System)

**Qualification** : Must be plus 2 pass (Graduates Preferable)

**Degree** : Bachelor of Biblical Studies

**Uniqueness** : Only Video Bible College in India.

**Teachers** : Internationally Known, Committed men of God, of USA.

**Teaching** : Through Video Equipment with Interpretation

## SCHOLARSHIP AVAILABLE

***Call or write today for prospectus and other details to***

*The Director*

**World Video Bible College**

Dharapuram Road, KANGAYAM - 638 701

INDIA.

Telephone : (04257) 20030

## பெண்கள் பகுதி

"ஆதியிலே, தேவன் ...." (ஆதி. 1:1).

# தேவனைப் பற்றி குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுத்தல்

"அம்மா!" - அசிமா அழைத்தாள். "ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நாம் ஆராதனைக்குச் செல்லுகிறோம்; வீட்டிலே தேவனைப் பற்றிக் கற்றுக் கொள்ளுகிறோம், அவரிடம் ஜெபம் செய்கிறோம். ஆனாலும், நாம் தேவனைப் பார்க்கவும் முடியவில்லை, நம்மிடம் அவர் பேசுவதைக் கேட்கவும் முடியவில்லை. உண்மையிலேயே ஒரு தேவன் இருக்கிறார் என எப்படித் தெரியும்? அவரைப் பற்றிய உண்மையை நாம் புரிந்து கொள்ளுகிறோம் என உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"என்னுடைய நண்பர்களில் சிலர் மாறுபாடான கடவுள்களை நம்புகின்றனர், கோவில்களுக்கும் அவர்கள் செல்லுகின்றனர்," என்றான் அந்தோனி. "பள்ளியிலே நான் சாப்பிடும் முன்பு தேவனுக்கு நன்றி கூறி ஜெபம் செய்வதைப் பார்த்து மனோஜ் கேலி செய்தான். கடவுள் என ஒன்றுமில்லை என்றும், எனக்குத்தானே நான் பேசிக் கொண்டேன் என அவன் சொல்லுகிறான்."

"அவை முக்கியமான கேள்விகள் "என்றாள் மேரி, அசிமா, அந்தோனி ஆகியோரின் தாய். "தேவனுக்குக் கணக்கு ஒப்புவிக்கும் வயதை நீ எட்டி இருக்கிறாய். அவரை விசுவாசிப்பதும், வயதை நீ எட்டி இருக்கிறாய். அவரை விசுவாசிப்பதும், அவருக்குக் கீழ்ப்படிவதும், அவருடைய ஆவிக்குரிய குடும்பத்தில் ஒரு பிள்ளையாக மாறுவதும் என்ன என்பதை நீ புரிந்து கொள்ள வேண்டும்.

"அப்போஸ்தலர் நடபடி 17ம் அதிகாரத்தில் காணப்படும், பவுல் அத்தேனே பட்டணத்திற்குச் சென்ற கதை உனக்கு நினைவிருக்கிறதா? தெரு வழியே அவர் நடந்து சென்று கொண்டிருந்த போது, ஆராதனை மேடைகள் அமைக்கப்பட்டு அவைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த பல விக்கிரகங்களை அவர் கவனித்தார். பின்னர், "அறியப்படாத தேவனுக்கு" என்று எழுதப்பட்டிருந்த ஒரு பலிபீடத்தையும் அவர் கண்டார். நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன் என்று அம்மக்களிடம் சொன்னார்.

"பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் கர்த்தராயிருக்கிறவர், உலகத்தையும் அதிலுள்ள சகலவற்றையும் படைத்த தேவனாக இருப்பதால், அவர் கைகளினால் உண்டாக்கப்பட்ட கோவில்களில் வாசம் செய்வதில்லை. அவருக்கு ஏதோ தேவைப்படுவது போல, மனிதனுடைய கரங்களால் வணங்கப்பட வேண்டியதும் இல்லை. ஏனெனில், அவரே சகலருக்கும் வாழ்வும், உயிரும், சகல பொருட்களையும் அளிக்கிறார். சகல தேசத்து மக்களையும் ஒரே இரத்தத்தினால் உண்டாக்கி, உலகின் சகல இடங்களிலும் வசிக்கச் செய்திருக்கிறார். நம்மிலிருந்து அதிக தூரத்தில் அவர் இல்லாதிருந்தும், அவரைத் தடவியாகிலும் தேடிக்கண்டு பிடிக்கத்தக்கதாக அவர்களுடைய காலங்களையும் குடியிருப்பு எல்லைகளையும் நிர்ணயித்துள்ளார். ஏனெனில், நாம் அவரில் வாழுகிறோம், அசைகிறோம், சகல காரியங்களையும் செய்து கொண்டு வருகிறோம். சில புலவர்கள் கூறியிருப்பது போல, "ஏனெனில் நாமும் அவருடைய குழந்தைகளாக இருக்கிறோம்."

"தங்களை விட ஒரு மகத்தான சக்தியை தொழுது கொள்ள வேண்டுமென்ற தூண்டுதல் உலகமெங்குமுள்ள மக்கள் அனைவரிடமும் காலா காலமாக அவர்கள் உள்ளத்திலேயே இருந்து வந்திருக்கிறது. அத்தேனே பட்டணத்து மக்கள் விக்கிரகங்களை உண்டாக்கியிருந்ததற்கும், இன்று வித்தியாசப்பட்ட மதங்களையும் தேவர்களையும் பல மக்கள் உண்டாக்குவதற்கும் அதுவே தான் காரணம். தொழுது கொள்ளும் தேவை அவர்களிடம் இருந்த போதிலும், உண்மையான தேவனை அவர்கள் அறிய மாட்டார்கள்.

"முதல் மனிதனான ஆதாமின் நாசியில் ஜீவனை ஊதி அவனை ஒரு "ஜீவ ஆத்துமாவாக", தம்மைப்போல ஆவிக்குரியவனாக தேவன் உண்டாக்கினார். பிற வழிகளிலும் கூட ஆதாமை மிருகங்களிலிருந்தும் வித்தியாசமாக உண்டாக்கினார். நல்லது, கெட்டதை பகுத்தறியும் ஒரு மனசாட்சியை அவனுக்குக் கொடுத்தார். உணர்ச்சிகளை உணரக் கூடியவனாகவும், நினைக்கவும், கற்றுக் கொள்ளவும் கூடியவனாக அவனை படைத்தார். எல்லா மனித ஜீவன்களிடமும் உள்ள தேவனுடைய இந்த சாயல்கள் அவன் தேவனைத் தேடவும், அவரைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யவும் வைக்கிறது. மனுக்குலத்தை விட மிகப்பெரிய ஒரு சக்தி இருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ள இவ்வுலகத்திலுள்ள சகல காரியங்களும் கூட உதவுகின்றன. ஒன்றும் தானாகவே உண்டாவதில்லை. ஒரு கணிதப் பிரட்சனை கூட தானாகவே தீருவது இல்லை. சாப்பாடு

தானாகவே உண்டாவதில்லை. அப்படியிருக்கையில், உலகம் தன்னைத் தானே எப்படி உண்டாக்கியிருக்க முடியும் அல்லது தொடர்ந்த வளர்ச்சியை அடைந்திருக்க முடியும்? அது ஒருபோதும் நடப்பதில்லை. மனிதனை விட வல்லமை மிக்க ஒரு சக்தி மட்டுமே மனிதனை உண்டாக்கி இருக்க முடியும். மிகவும் சிக்கலான பல காரியங்களை மனிதன் இன்னும் நன்றாகப் புரிந்து கொள்ள இயலாதவனாக இருக்கிறானே?

"ஒரு மரத்தைப் பார். ஒரு உயிரற்ற போலியான மரத்தை மனிதன் உண்டாக்க முடியும்; ஆனால் ஜீவனுள்ள ஒரு சிறு இலையைக் கூட அவனால் உண்டாக்க முடியாது. அத்தேனே பட்டணத்தில் பவுல் கூறியதைப் போல, தேவன் மட்டுமே ஜீவனையும் சுவாசத்தையும் கொடுக்க முடியும்.

"தேவனை வணங்க வேண்டுமென்ற உணர்வு ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆனால் உண்மை தேவனை மனிதன் அறியாதிருக்கும் போது, பல கடவுள்களை உண்டாக்குகிறான். பின்னர் அவன் உண்டாக்கியவைகளையே வணங்குகிறான் அந்தோனி! மக்கள் செய்த காரியங்களை தேவன் எப்படி வர்ணிக்கிறார் என்பதை, உனது வேதாகமப் புத்தகத்தை எடுத்து ஏசாயா 40 : 18 - 20 வசனங்களைப் படித்துக் காட்டு!" அந்தோனி அதைப் படித்தான் : "இப்படியிருக்க, தேவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? எந்தச் சாயலை அவருக்கு ஒப்பிடுவீர்கள்? கன்னான் ஒரு சுரூபத்தை வார்க்கிறான், தட்டான் பொன் தகட்டால் அதை மூடி, அதற்கு வெள்ளிச் சங்கிலிகளைப் பொருந்த வைக்கிறான். அதற்குக் கொடுக்க வகையில்லாதவன் உளுத்துப் போகாத மரத்தைத் தெரிந்து கொண்டு, அசையாத ஒரு சுரூபத்தைச் செய்யும்படி நிபுணனான ஒரு தச்சனைத் தேடுகிறான்."

"அசீமா! நீ உன் வேதாகமத்தில், ஏசாயா 44ம் அதிகாரத்தில் 15-17 வசனங்களில் காணப்படும் ஒர மரத்தை வெட்டிய மனிதனின் வர்ணனையைப் படித்துக்காட்டு."

"மனிதனுக்கு அவைகள் அடுப்புக்காகும் போது, அவன் அவைகளில் எடுத்துக் குளிர் காய்கிறான்; நெருப்பை மூட்டி அப்பமும் சுடுகிறான்; அதினால் ஒரு தெய்வத்தையும் உண்டு பண்ணி, அதைப் பணிந்து கொள்ளுகிறான்; ஒரு விக்கிரகத்தையும் அதினால் செய்து, அதை வணங்குகிறான்." அசீமா தொடர்ந்து படித்தான் : "அதில் ஒரு துண்டை அடுப்பில் எரிக்கிறான்; ஒரு துண்டினால் இறைச்சியைச் சமைத்துப் புசித்து, பொரியலைப் பொரித்து திருப்தியாகி, குளிருங் காய்ந்து : அனலானேன்;

நெருப்பைக் கண்டேன் என்று சொல்லி; அதில் மீதியான துண்டைத் தனக்கு விக்கிரக தெய்வமாகச் செய்து, அதற்கு முன் விழுந்து, அதை வணங்கி: நீ என் தெய்வம், என்னை இரட்சிக்க வேண்டும் என்று அதை நோக்கி மன்றாடுகிறேன்."

"ஆனால் உண்மையான தேவன் யார் என நமக்கு எப்படித் தெரியும்?" என அந்தோணி கேட்டான்.

"பல காரியங்களில் இருந்தும் நாம் காணலாம்" என்று மேரி பதிலளித்தாள். "கடவுளைப் பற்றிய சில மதங்களின் போதனைகள் கட்டுக் கதைகளைப் போலத் தொனிக்கின்றன. அதாவது மனிதனின் கற்பனைகளில் உதித்தது போல, பின்னர், சில மதங்களில் மக்கள் செய்ய வேண்டுமென கற்பிக்கிற சில காரியங்கள் சரியானவை அல்ல. பொய் பேசுவது சரிதான் என்று சில மதங்கள் கூறுகின்றன; இன்னும் சில மதங்கள் மனிதனைப் பலியிடச் சொல்லுகிறது. அப்படிப்பட்ட மதங்களைப் பின்பற்றுவோர் தாங்கள் செய்யும் தவறான செயல்களால் துன்பத்திற்குள்ளாக நேரிடுகிறது.

"பல மதங்களின் சட்டப் புத்தகங்களை நீ படிக்கும் போது சில உண்மைகளை ஒவ்வொரு புத்தகத்திலும் காண்பாய். ஆனால் அவை சில தவறான உபதேசங்களையும் கொண்டுள்ளன. சத்தியம் என்று நிரூபிக்கப்பட்டதும், எவ்விதமான தவறான உபதேசமும், அதில் இல்லை என்னும் ஒரே புத்தகமென்று நாம் அறிந்து கொண்டது வேதாகமம் மட்டுமே.

"தேவனைப் பற்றிய சத்தியத்தை நீ கற்றுக் கொள்ள வேண்டுமானால், உன் மனதில் எதையும் நிர்ணயித்துக் கொள்ளாமல், திறந்த மனதுடன், சத்தியத்தை புரிந்து கொள்ள தேவன் உதவ வேண்டுமென அவரிடம் எப்போதும் வேண்டிக் கொண்டு, மனப்பூர்வமாக கற்றுக் கொள்ள வேண்டும். உண்மையான தேவனை அறிந்து கொள்ள அது மற்றொரு முக்கிய வழி, நாம் அவருடைய பிள்ளைகளாக மாறும் போது, அவர் நம்முடைய வாழ்க்கையில் உதவிக் கொண்டு வருவதையும் நமது ஜெபங்களுக்குப் பதிலளிப்பதையும் ஒவ்வொரு நாளும் நாம் காண முடியும். தேவனிடமிருந்து மட்டுமே ஜீவன் வருவது போல, தேவன் தாமே ஒரே ஜீவனுள்ள தேவனாகவும் இருக்கிறார்."

தேவனோடு நமக்குள்ள தந்தை - பிள்ளை உறவை அறிந்து கொள்ள உதவும் தலைசிறந்த மதிப்புள்ள பொறுப்பு பெற்றோர்களுக்கு உண்டு. தேவனின் பிரசன்னம், அன்பு பற்றிய உபதேசத்தை சிறு வயதிலிருந்தே தொடங்க வேண்டும். வாயினால் சொல்லப்படும் வார்த்தைகளை

உண்மையிலேயே ஒரு குழந்தை புரிந்து கொள்ளுவதற்கு வெகு நாட்களுக்கு முன்பே, தேவனைப் பற்றி அவனுடைய பெற்றோர்கள் கூறக் கேட்கும் அன்பின் தொனியையும் விசுவாசத்தையும், மகிமையையும் அவன் புரிந்து கொள்ளக்கூடும். இதுவே விசுவாசத்தின், ஏன் புரிந்து கொள்ளுவதின், ஆரம்பமும் ஆகும்.

தேவனுடைய பிரசன்னத்தை நமது குழந்தைகள் உணரக்கூடிய மற்றொரு முக்கிய வழி பாடல்கள் ஆகும். ஆராதனைப் பாடல்களைப் பாடும் தாய்மார்கள், பொதுவாக சண்டையிடும், அல்லது கெட்ட வார்த்தைகளை பயன்படுத்தும், அல்லது எப்போதும் வீணானக் கூச்சல் போடும் குணம் படைத்தவர்களாக இருக்க மாட்டார்கள்.

வேதாகமத்தை நாம் விரும்புவது மூலமாகவும், தேவனைப் பற்றியும் அவரோடு நமக்குள்ள உறவு பற்றியும் வேதாகமம் கூறுவதை அறிவதில் நமக்குள்ள ஆர்வத்தின் மூலமாகவும் நாம் கற்பிக்கிறோம். ஆனால் நமது வீடுகளில், குறிப்பாக சிறு குழந்தைகள் மத்தியில், நமது சொந்த விசுவாசத்தின் வெளிச்சமும் தேவனிடம் நாம் காட்டும் அன்பும் அவர்களுக்குக் கற்றுத் தருவது, நமது வாய் உபதேசத்தைக் காட்டிலும் மிகவும் பயனளிப்பதாக இருக்கிறது.

**B.B. Choate**

**R.R. Nayagam**

## -: அஞ்சல் வழி வேதகாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை" ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண். 27
காங்கயம் 638 701.

## புதிய ஏற்பாட்டு ஆராதனை (5)

# ஆதிக் கிறிஸ்தவர்களின் தொழுகை!

மக்கள் எவ்வாறு தொழுகிறார்கள், எங்கே தொழுகிறார்கள், எப்போது தொழுகிறார்கள், தொழுகையில் அவர்கள் செய்வதென்ன என்பவற்றை எல்லாம் கவனிக்க மிகவும் ஆர்வமாக இருக்கிறது. இன்று அநேக சபைகள் இருப்பதும், அவைகள் ஒவ்வொன்றும் வித்தியாசமான வழிகளில் தொழுவதையும் நாம் அறிவோம். ஏன் இந்த வித்தியாசம்? ஏதாவது வித்தியாசம் இருக்க வேண்டுமா? நாம் எவ்வாறு தொழுதுகொள்ள வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறாரோ அவ்வாறுதான் நாம் அவரைத் தொழுது கொண்டிருக்கிறோம் என நாம் அறிவது எப்படி? அதைக்கண்டு பிடிக்க மிகவும் சிறந்த வழிகளில் ஒன்று: வசனத்திற்குச் சென்று, ஆதி கிறிஸ்தவர்கள் எவ்வாறு தொழுதார்கள் என்று கண்டுபிடிப்பதுதான்.

பெந்தேகோஸ்தே நாளிலே, சபை நிறுவப்பட்டிருந்த பின்பு, "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" என வேதாகமம் கூறுகிறது. (அப் 2 : 42) இந்த சீடர்கள் அல்லது கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலர்களுடைய கோட்பாடுகளில் அல்லது உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். அவர்கள் என்ன செய்தனர்? தொழுகையின் எல்லா முறைகளும் கொடுக்கப்படாவிட்டாலும், மூன்று முறைகளைக் காணமுடிகிறது. அவை: அந்நியோந்நியம் அல்லது கொடுத்தல், அப்பம் பிட்குதல் அல்லது கர்த்தரின் பந்தி, ஜெபங்கள் ஆகும்.

பின்னர், பவுல் ஒரு பிரயாணமாகப் போகையில், துரோவா வழியாகச் செல்லுபோது அங்கே பலநாள் தங்கி அங்குள்ள பிராந்திய கிறிஸ்தவர்களோடு தொழுது கொள்ளுவதாக நாம் படிக்கிறோம்; "வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்" (அப்.20:7). ஆராதனை செய்யும் நாள் வாரத்தின் முதல் நாள் என நாம் இங்கே கவனிக்கவேண்டும். பவுல் துரோவ

பட்டணத்துக்கு திங்கட்கிழமை வந்து சேர்ந்திருக்கிறான். என்றாலும், அவர்களோடு சேர்ந்து ஆராதிக்கும் சந்தர்ப்பத்திற்காக அந்த வாரம் முழுவதும் அங்கு தங்கி, சனிக் கிழமையைக் கூட கடந்து, வாரத்தில் முதல் நாள் வருமளவும் காத்திருந்து கர்த்தர் நியமித்த நாளில் கர்த்தருடைய மக்களோடு ஆராதனை செய்தான். இந்த நாளில் தான் சீடர்கள் அல்லது கிறிஸ்தவர்கள் அப்பம் பிட்க, அல்லது கர்த்தரின் பந்தியில் கலந்துகொள்ள கூடி வந்தார்கள் என்று மேலும் கூறுகிறது. இறுதியாக, பவுல் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்களுக்குப் போதித்தான். பின்னர் அவருடைய வழியே போனான்.

கர்த்தரின் பந்தியின் முக்கியத்துவத்தைப் பற்றி, தனது கொரிந்திய சகோதரர்களுக்கு பவுல் எழுதுவதை 1 கொரிந்தியர் 10. 11. ஆகிய அதிகாரங்களில் நாம் காணலாம். அதைக் கவனிப்போம். "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன். ஏனெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதை பிட்டு நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணிய பின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனிதனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில் அபாத்திரமாய்ப் போஜன பானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான். இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனமும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்" (1 கொரி 11 : 23 - 30) இப்போது இங்கு காணப்படுகிறவைகளில் சில முக்கிய குறிப்புகளை நாம் பட்டியலிடுவோம் :-

1. இதை பவுல் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டான்
2. அப்பமானது கிறிஸ்துவின் சரீரத்தையும், இரசம் அவருடைய இரத்தத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அவர் கூறுகிறார்.
3. கிறிஸ்துவின் சரீரத்தையும் அவருடைய இரத்தத்தையும் நினைவு கூறும் படியாக, அவற்றில் பங்குகொள்ள வேண்டும்.

4. அவ்வாறு செய்யும்போது, கர்த்தரின் மரணத்தை அவர் வருமளவும் அவர்கள் அறிவிப்பதாக இருக்கும்.

5. கர்த்தருக்கு உண்மையாக இராமல், எவன் அபாத்திரமாய் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜன பானம் பண்ணுகிறான்.

6. இந்த அப்பத்திலும் இரசத்திலும், பங்கு கொள்ளுமுன், தன்னைத்தானே சோதித்தறிந்து ஒருவன் பங்குகொள்ள வேண்டும். வாழ்வில் பாவத்தோடு இருக்கும் காரணத்தால், கர்த்தரின் பந்தியில் பங்கு கொள்ளத் தகுதியற்றிருப்பவர்கள், தேவனோடு ஒப்புரவாகி அதன் பின்னர் கர்த்தரின் பந்தியில் கலந்துகொள்ள வேண்டுமென்பதே இதன் கருத்து. எப்படி வாழவேண்டுமோ அப்படி வாழாதவனும், அல்லது அவ்வாறு வாழ முடியாதவனும், கர்த்தரின் பந்தியில் கலந்துகொள்ளக் கூடாது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே ஒருவன் வாழ்வில் இருக்கக்கூடாத ஒன்று அவனிடம் இருந்தால் அதை விட்டுவிடவேண்டும். அப்போதுதான் அந்த நபர் ஒரு உண்மையான கிறிஸ்தவனாக கர்த்தரின் பந்தியில் கலந்துகொள்ள முடியும்.

7. கர்த்தருடைய மக்கள் பிறரிடம் பாவங்களை அறிக்கையிட வேண்டியதில்லை. ஆனால் பவுல் கூறுவதைப்போல ஒவ்வொருவரும் தன்னைத் தானே சோதித்தறிந்து பின்னர் பந்தியில் கலந்து கொள்ளவேண்டும். தேவன் இருதயத்தை அறியக்கூடியவராக இருக்கிறார். ஆனால் சபை அங்கத்தினர்களாகிய நாம் அறியோம் எனவே, ஒரு மனிதனை தீர்ப்புச் சொல்ல நமக்கு உரிமை இல்லை. ஆனால் வேதாகம உபதேசத்தின் வெளிச்சத்தில் தனிப்பட்ட ஒவ்வொருவனும் தன்னைத்தானே சோதித்தறிய வேண்டியது அவருடைய கடமை.

அத்தோடு (1 கொரிந்தியர் 11-ம் அதிகாரத்தில், கர்த்தரின் பந்தியை ஒரு விருந்து போலாக்கி அதை கேலிப்பொருளாகிய கொரிந்தியர்களை பவுல் கண்டிக்கிறார். உண்டு குடிக்க அவர்களுக்கு வீடுகள் உண்டென்றும், ஆராதனையில் கலந்து கொள்ள வருவது தங்கள் சரீரப்பசியைப் போக்க உண்ணவும் குடிக்கவும் அல்ல என்றும் அவர்களுக்கு அவர் சுட்டிக்காட்டுகிறான். இன்றும் இது பொருந்துகிறது, பக்தி வைராக்கியத்துடன் கிறிஸ்தவர்கள் ஆராதனையில் பங்கு கொள்ளவேண்டும். அப்பத்திலும், இரசத்திலும் அவர்கள் பங்குகொள்ளும்போது கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் நினைவு கூறுவதைத் தவிர வேறு சிந்தனை கூடாது.

(தொடரும்)

# "சாத்தானுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே?"

பிசாசும் கெட்டவனுமான சாத்தானின் தீயத் திட்டங்கள் நம்மில் பலருக்கு மிகவும் பழக்கமானவை. அவன் எதிராளி என்றும், "கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான்" என்றும் வர்ணிக்கப் படுகிறான். (1 பேதுரு 5 : 8). "பாவஞ் செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதி முதல் பாவஞ் செய்கிறான்; பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்" என யோவான் கூறுகிறார். (1 யோவான் 3 : 8). பிசாசானவன் ஆதி முதற் கொண்டே மனித கொலை பாதகனாயிருக்கிறான் என்றும் யோவான் மேலுமாகக் கூறுகிறார். (யோவான் 8 : 44). பின்னர், யாக்கோபு இவ்விதமாக புத்திமதி கூறுகிறார் : "ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்." (யாக்கோபு 4:7.

பிசாசானவன் ஆதியிலேயே இருந்தான்; ஆதாம், ஏவாளை அவன் சோதித்தின் விளைவாக தேவனுக்கு முன்பாக அவர்கள் பாவம் செய்தார்கள். அதனால், ஏதேன் தோட்டத்திலிருந்தும் ஜீவ விருட்சத்திலிருந்தும் அவர்கள் துரத்தப்பட்டார்கள். துன்மார்க்கனுக்கு செவி சாய்த்ததால், பாவமும் அதைத் தொடரும் பயங்கரமின் விளைவுகளும் உலகத்திற்குள் நுளைந்தன. கிறிஸ்து உலகத்தில் இருந்தபோது அவரையே சாத்தான் சோதித்தான். ஆனால் ஒவ்வொரு தடவையும், "கர்த்தர் இவ்வாறு கூறினார்" என்று வசனத்தை எடுத்துச் சொல்லி அவனுக்குப் பதிலளித்தார். (மத்.4:1- 11).

சாத்தான் வல்லமையுள்ளவனாக இருப்பினும், நாம் அனுமதிக்காமல் நம்மை அவன் சோதனையில் வீழ்த்த முடியாது. மீண்டும் மீண்டுமாக அவன் நம்மை சோதிக்கக் கூடும். ஆனால் பவுல் நமக்கு உறுதியளிப்பது போல, "மனிதருக்கு ஏற்படுகிற சோதனையே யல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்." (1 கொரி. 10 : 13). தப்பிக்க ஒரு வழி உள்ளது; ஆனால் அந்த

வழியைக் கண்டு கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒருவன் தப்பிக்க எவ்வித முயற்சியும் செய்யாத பட்சத்தில், கர்த்தர்கூட அவனைக் காப்பாற்ற இயலாது.

"சாத்தானாலே நாம் மோசம் போகாதபடிக்கு அப்படிச் செய்தேன்; அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே" என பவுல் எச்சரிக்கிறார். (2 கொரி. 2:11). சாத்தான் நம்மை தனக்கு அநுகூலமாக்கிக் கொள்ள முடியும்; உலக முழுவதும் பல மக்களிடம் இவ்வாறாக தன் கைவரிசையைக் காட்டியிருக்கிறான். என்ற போதிலும், சாத்தான் எப்படி வேலை செய்கிறான் என்பதை நாம் அறிந்தால், அவனுடைய தந்திரங்களை தெரிந்து கொண்டால், அதாவது, நம்மை சோதனையில் விழவைக்கவும், ஏமாற்றவும், நம்மை அழிக்கவும் அவன் கையாளும் வழிகளைத் தெரிந்து கொண்டால், பின்னர் அவன் இவற்றைச் செய்யமுடியாதபடி தக்க விதத்தில் நாம் எச்சரிக்கையாக இருந்து கொள்ளலாம்.

நம்மை வீழ்த்த அவன் கையாளும் தந்திரங்களில் சில யாவை? அவன் பயன்படுத்தும் பல கெட்ட முன்னுதாரணங்களும், கவர்ச்சிகளும் நம் கண் முன் எப்போதுமே உள்ளன. வெளி உலகத்திற்குக் கூட நாம் செல்லவேண்டாம்; அவற்றில் சில, நமது நெருங்கிய குடும்ப அங்கத்தினர்கள் அல்லது சிநேகிதர்களாகக் கூட இருக்கலாம். அவர்களிடம் காணும் பல கெட்ட பழக்கங்களை நாம் எளிதில் பற்றிக் கொள்ள முடியும். நம்மை மயக்கி அவற்றிற்கு இணங்கச் செய்யவும், உலக காரியங்களான மாம்சத்தின் கிரியை, பொருளாசை, கர்வம், கள்ளப் போதகம், அப்பாவித் தோற்றமளிக்கும் அலட்சியப் போக்கு போன்ற தீய செயல்கள் அனைத்தும் இந்தப் பட்டியலில் அடங்கும். தேவனை விட நாம் அதிக முக்கியத்துவம் தரும் காரியங்கள் கூட, நம்மை வீழ்த்தும் ஆயுதங்களாக சாத்தானால் பயன்படுத்தப்படுகின்றன.

நம்மை திசை திருப்பவும், கண்ணி வைத்துப் பிடிக்கவும் சாத்தான் பயன்படுத்தும் காரியங்கள் எண்ணற்றவை. "எல்லாரும் இதைச் செய்கிறார்கள்", "வாழ்க்கையை அனுபவி," "இன்னும் நிறைய காலம் இருக்கிறது", "இந்த உலகத்தில் நமக்குக் கிடைப்பதை அனுபவிக்கத்தான் இங்கு இருக்கிறோம்." இப்படிப்பட்ட பல உபாயங்களைச் செய்கிறான். இப்படிப்பட்ட சோதனைகளைச் சந்தித்து, மீண்டுவர நாம் மிகவும் பலசாலிகளாக இருக்க வேண்டும். ஆனால் சாத்தான் யார் என்றும் அவன் எதற்காக கிளம்பியிருக்கிறான் என்றும் நாம் நினைவில் வைத்துக் கொண்டால் நாம் தப்பிக்கலாம்.

சாத்தானைவிட தேவன் மிகவும் வல்லமையுள்ளவர் என்பதையும், அவர் நம்மை நேசிக்கிறார் என்பதையும், நம்மோடு இருப்பதாகவும், சகல சோதனைகளையும் வெல்ல நமக்கு உதவுவதாகவும் வாக்களித்துள்ளார் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் அவரைக் கூப்பிடும் போது நமக்கு அவர் செவி சாய்க்கிறார் என்பதையும், நமக்கு அவர் உதவி செய்வதை மீண்டுமாக உறுதி அளிக்கும் அவருடைய வசனம் நம்மிடம் உள்ளது என்பதையும், நமக்கு உற்சாகமளிக்கும் சகோதரர்கள் நமக்கு உள்ளனர் என்பதையும், நாம் மறக்கலாகாது. அதோடு, இந்த உலகத்தின் சகல ஆசீர்வாதங்களையும், வரப் போகும் உலகில் நித்திய ஜீவனை அளிக்கும் வாக்குத் தத்தத்தையும் நமக்கு தந்துள்ளார் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த உலகமும் அதிலுள்ள சகலமும் அழிந்து போகும் என வேதாகமம் கூறுகிறது. பாவத்தின் சம்பளம் மரணம் என்றும் அது கூறுகிறது. வேறு விதமாகச் சொன்னால், சாத்தான் நமக்குத் தருவதாக ஆசை காட்டுவதையும், தேவன் நமக்கு அளிக்கக் கூடியவற்றையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கவே முடியாது. நாம் விழிப்புடன் இருந்தால் கர்த்தரை மட்டுமே தேர்ந்தெடுத்து, அவருக்கு மட்டுமே ஊழியஞ் செய்வோம்.

J.C. Choate

எஸ்.எஸ்.ராஜன்


## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20 MM, ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே

வேண்டுவோர் தொடர்பு கொள்க

E.Z.S. ராஜநாயகம்

கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு,

காங்கயம் - 638 701.

# குற்றங் கண்டு பிடித்தல் என்னும் பாவம்

"அப்பொழுது விபச்சாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் கொண்டு வந்து அவளை நடுவே நிறுத்தி. போதகரே, இந்த ஸ்திரீ விபச்சாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டாள். இப்படிப்பட்டவர்களை கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று மோசே நியாயப் பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள். அவர் மேல் குற்றஞ் சுமத்துவதற்கான காரணம் உண்டாகும் பொருட்டு அவரைச் சோதிக்கும்படி இப்படிச் சொன்னார்கள். இயேசுவோ குனிந்து விரலினால் தரையிலே எழுதினார் - யோவான் 8 : 3 - 6

ஒரு மனிதனுடைய வாழ்வில் குற்றங் கண்டு பிடிக்க வேண்டுமென்று சிலர் தேடி அலையும் போது எந்த வழியிலாவது அவற்றைக் கண்டுபிடித்து விடுவர். ஏன், தாங்களே ஒன்றை உற்பத்தி செய்தாவது அவனை மாட்டிவிடுவர். குற்றத்தின் நிழல் கூட படமுடியாத ஒருவரிடம் குற்றங்கண்டுபிடிக்க வேதபாரகரும் பரிசேயரும் முயற்சி செய்து கொண்டிருந்தனர்.

மோசேயின் சட்டத்தை மீறியிருந்த ஒரு நபரைத் தண்டிப்பதில் இம்மனிதர்கள் அக்கறை எடுத்துக் கொண்டனர் என்ற கூற்றை நான் உண்மையிலேயே சந்தேகிக்கிறேன். அந்தப் பெண் விபச்சாரத்தில் ஈடுபட்டிருந்த செயலுக்காக அவர்கள் கவலைப்பட்டு உருகிப் போகவில்லை. மாறாக, இயேசுவை நன்றாக மாட்டி விடுவதற்கு அவள் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தாள் என மகிழ்ந்து போயிருப்பர்.

சட்டத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஆர்வம் எதுவும் அவர்களுக்குக் கிடையாது இயேசுவிடம் அவர்கள் பேசிய போது சுட்டிக் காட்டிய சட்டம் லேவியராகமம் 20 10ம் வசனமாகும். என்ற போதிலும் குற்றவாளியான அந்த மனிதன் எங்கே? பிடிபட்ட அவன் தப்பிச் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கிறான் என்பது தெளிவு. அந்நாட்களில் பெண்கள் விடுதலை இயக்கங்கள் இருந்திருப்பின், சந்தேகமின்றி, அப்பெண்ணும் கூட விடுதலை அடைந்திருப்பாள். உண்மையிலேயே சட்டத்தின்படி நடக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பியிருந்தால், அந்த மனிதனும் அப்பெண்ணும் இயேசுவுக்கு முன்பாக நின்று கொண்டிருப்பர்.

இயேசுவைக் கவிழ்க்க வேண்டுமென்பது மட்டுமே இம்மனிதர்களின் விருப்பமாக இருந்தது. அவர் பேரில் அவர்கள் ஏதாவது குற்றங் கண்டு பிடித்தால், அவற்றை அவருக்கு விரோதமாக மக்கள் முன்னிலையில் பயன்படுத்தலாம் எனக் கருதினர். சட்டத்தின்படி, அந்தப் பெண் கல்லால் அடிக்கப்பட வேண்டுமென்று இயேசு பதிலளித் திருப்பாரே யானால், நிச்சயமாக அவரை மனிதத்தன்மை இல்லாத, இரக்கமற்ற, அன்பில்லாத, பரிதாபக் குணமற்ற, கருணையில்லாத ஒரு மனிதன் என்றெல்லாம் அவர்கள் குற்றஞ் சாட்டியிருப்பார்கள். மாறாக, அவர் கருணை காட்டி அவளை விடுதலை செய்யக் கோரியிருந்தால், அவர் சட்டத்தை மீறுவதாக அவர் மேல் குற்றஞ் சுமத்தியிருப்பர். நன்றாக தங்கள் பிடியில் சிக்கிக் கொண்டார் என அவர்கள் எண்ணினார்கள். ஆனால் தொடர் வசனங்கள் காட்டுவது போல, இயேசு அவர்களுடைய வஞ்சக எண்ணத்தை அறிந்தவராக அவர்கள் மூக்கை உடைத்துப் போட்டார்.

இன்று நாமும் பல வேளைகளில் வேதபாரகர், பரிசேயர் மாதிரி நடந்து கொள்ளுகிறோம். கிறிஸ்துவின் கொள்கைகளையும் உபதேசங்களையும் கடைபிடிப்பதை விடுத்து, ஒருவருக்கொருவர் சிண்டு பிடித்துக் கொண்டிருக்கிறோம்.

கலாத்தியர் 6 1ம் வசனத்தில், "சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப் பண்ணுங்கள். நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு' என சொல்லப்பட்டுள்ளது. தவறு செய்யும் சகோதரர்கள் காரியத்தில் தலையிடும் போது நாம் கடைபிடிக்க வேண்டி "தங்க விதி' ஒன்றுண்டு. "ஆகையால், மனிதர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இதுவே நியாயப் பிரமாணமும் தீர்க்க தரிசனங்களுமாம்.' (மத்தேயு 7 12). நாம் தவறு செய்யும் போது பிறரால் எவ்வாறு நடத்தப்பட வேண்டுமென்று விரும்புகிறோமோ, அவ்விதமே தவறு செய்யும் ஒரு சகோதரனிடம் நாமும் நடந்து கொண்டால், நாம் எவ்வளவு நல்லவர்களாக இருக்க முடியும்? "மகத்தான ஆவியே, ஒருவனுடைய காலணிகளுக்குள் இரண்டு வாரங்கள் நான் நடக்கும் வரை, அவனை நான் நியாயந் தீர்க்காதிருக்க எனக்கு உதவி செய்யும்' என சீயோக் இந்தியர்கள் ஜெபிப்பார்களாம். எவ்வளவு உண்மை உன் நண்பர்களை தேர்ந்தெடுப்பது கடினமான செயல். ஆனால் அவர்களை நார் நாராகக்

கிழித்தெறிவதோ மிக மிக எளிது. ஒரு மனிதனின் முதுகுக்குப் பின்னால் நீ செய்யக்கூடிய சிறந்த காரியம், அதைத் தட்டிக் கொடுப்பது தான். இவற்றையெல்லாம் நாம் கடைபிடித்து வந்தால் சபை எவ்வளவு அருமையாக இருக்கும்?

## குற்றங் கண்டு பிடித்தலில் தவறு என்ன?

கலாத்தியர் 6 7, 8 வசனங்களில் பவுல் கூறினார் "மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மை பரியாசம் பண்ணவொட்டார். மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்.' பிலிப்பு இப்பகுதியை மொழியாக்கம் செய்கிறார் ஒரு மனிதன் எதை விதைக்கிறானோ, அதைப் பொறுத்தே வாழ்வில் அவனுடைய அறுவடையும் இருக்கும். அவனுடைய இழிநிலைக்காக விதைத்தால், அவனுடைய அறுவடை அழிவும் மரணமும் தருவதாக இருக்கும்.

முதுகுக்குப்பின் பேசப்படுவதை யாருமே விரும்புவதில்லை. குறை கூறப்படுவதையும் எவரும் விரும்பமாட்டார்கள். பிறர் பேரில் நீ குறை கூறித் திரிவதைக் காணும் மக்களைப் பற்றியும், அவர்களின் முதுகுக்குப் பின்னால் நீ குறை கூறுவாய் என்பதை விரைவிலேயே அவர்கள் உணர்ந்து கொள்ளுவார்கள். கடைசியாக, பிறருடைய குறைகளை உன்னிடம் கேட்க யாருமே அகப்படமாட்டார்கள் மேலுமாக, இயேசு எச்சரித்தார் "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின் படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள். நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும். நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப் போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? மாயக்காரனே முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப் போடு. பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப் போட வகை பார்ப்பாய். (மத்தேயு 7: 1-5).

## குற்றங் காணல் எளிது.

குற்றம் எதுவும் அற்றவராக இயேசு இருந்த போதிலும், வேதபாரகரும் பரிசேயரும் அவரிடமே குற்றங் கண்டு பிடிக்க முடிந்த போது, நிறைவற்றவர்களாகக் காணப்படும் நாம் ஒருவருக்கொருவர் குற்றங் கண்டு பிடிக்க இயலும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

எந்த ஒரு பிராந்திய சபையிலும் அதிகமாக விமர்சிக்கப்படும் சகோதரர்கள் அங்குள்ள மூப்பர்களாகத்தான் இருக்கும் என்று நான் நினைக்கிறேன். "சுடும் எல்லைக்குள் நீ இருப்பின், நிச்சயம் நீ சுடப்படுவாய் என சகோதரன் WS வெஸ்ட் ஜூனியர் ஒரு தடவை கூறியது, மூப்பர்கள் விஷயத்தில் எவ்வளவு சரியாக இருக்கிறது.அவர்கள் சுடும் எல்லைக்குள் இருக்கின்றனர். எனவே அடிக்கடி சுடப்படுகின்றனர். அவர்களுடைய நிலையில் நம்மை வைத்துப் பார்க்க பல தடவைகள் நாம் தவறிப் போகிறோம். அவர்களுடைய பெரிய விமர்சகர்கள் போதிப்பவர்களாக இருக்கலாம். மூப்பர்களை ஒரு போதும் விமர்சிக்கக் கூடாது என நான் சொல்லவில்லை. தவறும் மூப்பர்களை, சுவிசேஷப் பிரகாரமாக திருத்த முடியும். கலாத்தியர் 6 : 1; யாக்கோபு 5 : 19; 20 : 1; தீமோ. 5 : 19, 20 என்ற போதிலும், எப்போதுமே மூப்பர்களை விமர்சனம் செய்வதில் தான் நாம் நேரத்தை செலவிடுகிறோமோ தவிர, அவர்களை பாராட்டுவதில்லை. நாம் மூப்பர்களை குறை கூறுவதில் செலவிடும் நேரத்தை, அவர்களை உற்சாகப்படுத்துவதிலும் பாராட்டுவதிலும் நாம் செலவழித்தோமானால், சபை இன்று இருப்பதை விட சிறப்பாக வளர்ச்சியடைந்து காணப்படுமோ என நான் சிலவேளைகளில் வியப்படைகிறேன். நமது விமர்சனங்கள் பல வேளைகளில் அழிவை ஏற்படுத்துகிறவைகளாக இருக்கின்றனவே தவிர ஆக்கப்பூர்வமாக இருப்பதில்லை. நாமே செய்ய விரும்பாத காரியங்களை மூப்பர்கள் செய்யவேண்டும் என பல தடவைகளில் நாம் எதிர்பார்க்கிறோம்.

பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட I தெசலோனிக்கேயர் 5 : 12, 13 வசனங்களில் காணப்படும் மூப்பர்கள் இன்றுள்ள சராசரி மூப்பர்களை விட எவ்விதத்திலாகிலும் வித்தியாசமாகக் காணப்பட்டார்களா என நான் ஐயப்படுகிறேன். நியாயம் வழங்குவதில் தெசலோனிய மூப்பர்கள் ஒரு போதும் தவறியிருக்க மாட்டார்களா? ஒரு போதும் முட்டாள்த்தனமாக நடந்திருக்க மாட்டார்களா? அவர்களுடைய பிள்ளைகள் எப்போதுமே தூய தூதர்களாகக் காட்சியளித்தனரா? சகலருடைய எதிர்பார்த்தலுக்கும்

ஏற்ப அவர்களுடைய மனைவிமார்கள் எப்போதுமே ஆடைகள் அணிவதில் கவனம் செலுத்தியிருப்பார்களா? பிராந்திய சபை நினைத்ததைப் போலவே, அவர்களுடைய தனிப்பட்ட குணங்கள் எப்போதும் சீராக இருந்திருக்குமோ? ஒழுங்கில்லாதவர் களுக்குப் புத்தி சொல்லுவதிலோ, திடனற்றவர்களைத் தேற்றுவதிலோ, பலவீனரைத் தாங்குவதிலோ, நீடிய சாந்தமுடையவர்களாக இருப்பதிலோ மூப்பர்கள் எப்போது, எப்படி, எங்கே இருக்க வேண்டுமென்று ஒவ்வொருவரும் நினைத்தார்களோ அவ்வாறு மூப்பர்கள் இருந்தனரா? எனக்கு உண்மையிலேயே சந்தேகமாயிருக் கிறது. இருந்த போதிலும், இன்றைய மூப்பர்களைப் போலவே இப்படியான தனிப்பட்ட வித்தியாசமான குணங்களைப் பெற்றிருந்த போதிலும், பவுல் சபைக்குக் கூறும் போது, மூப்பர்களை அவர்களுடைய பணியின் நிமித்தமாக அன்பினால் மிகவும் கனப்படுத்துங்கள் என்றார். குறைபாடுள்ள மனித ஜீவன்களை மூப்பர்களாக வைத்துக் கொண்டு அந்த பிராந்திய சபை கட்டளையை நிறைவேற்ற முடிந்தால், நாமும் அவ்வாறு செய்ய இயலும் என்பதை நீங்கள் மறுக்க முடியுமா? சிறந்த மூப்பர்கள் உங்களை வழி நடத்திச் செல்லுபவர்களாக இருந்திருப்பின், இன்றுள்ளதைப் போல சபை வளர்ச்சிக் குறைவாக இருந்திருக்காது என்று எந்த ஒரு கிறிஸ்துவின் சபைக்கும் பரிசுத்த ஆவியானவர் ஒரு போதும் கூறவில்லையே என்பது எனக்கு ஒரு சுவையான செய்தியாக இருக்கிறது. பாவமற்ற, ஆனால் தவறான ஒரு செயலை நாம் செய்யும் போது மட்டும் பிறர் நம்மோடு அனுசரித்துப் போக வேண்டுமென நாம் விரும்புவது வினோதமாக இல்லையா? ஆனால் மூப்பர்கள் தவறு ஏதாவது செய்து விட்டால் அவர்களை அனுசரித்துச் செல்ல நமக்கு முடிவதில்லை. மாறாக, அவர்கள் திடமற்றவர்கள், தகுதியற்றவர்கள், எனவே தூக்கி எறியப்பட வேண்டியவர்கள் ஆகிவிடுகின்றனர். எபிரேயர் 10:24ம் வசனத்தின்படி இன்று நாம் நடக்க வேண்டியவர்களாகிறோம். அன்பு செலுத்துவதிலும், நற்செயல்களைச் செய்வதிலும் உற்சாகத்துடன் ஒருவரை ஒருவர் தாங்கிக் கொள்ள வேண்டும்.

பல வேளைகளில் பிரசங்கிமார்கள் விமர்சிக்கப்படுகின்றனர். அது தேவையாகவும் இருக்கலாம். நிச்சயமாக நாம் அனைவரும் திருந்த வேண்டியவர்களே. ஆனால் அழிவான விமர்சனங்கள் எத்தனை பேரை திருத்தியிருக்கின்றன? வெகு சொற்பம். மூப்பர்களும் பிரசங்கியை விமர்சிப்பதை விடுத்து அவர்களைத் தாங்கி, உற்சாகப்படுத்தி, ஆலோசனைகள் வழங்கினால் சபையின் வளர்ச்சி எப்படியிருக்கும்? அதே போன்று, பிரசங்கிமார்களும் மூப்பர்களும் இணைந்து செயல்பட வேண்டும். பிரசங்கிமார் சத்தியத்திற்கு

விரோதமாக தவறைப் போதித்தால் மூப்பர்கள் அவர்களுடன் ஒத்துப் போக வேண்டும் என்று நிச்சயமாக நான் சொல்லவில்லை. அவர்களைத் திருத்த வேண்டும். எபிரேயர் 10 : 24 ம் வசனத்தின் படி மூப்பர்களும் பிரசங்கிமார்களும் நடந்து வந்தால் பல பிரச்சனைகள் தவிர்க்கப்படும்.

பிராந்திய சபையில் எந்த ஒரு சகோதரனிடத்திலோ அல்லது சபையின் எந்த ஒரு பணியிலும் குற்றங் கண்டு பிடிப்பது எளிது. ஆனால் அவ்வாறான சபைப் பணிகளில் நாமும் கலந்து கொண்டு அவற்றைச் சிறப்பாக செய்ய முயன்றால் எவ்வளவு நலமாக இருக்கும்? கிறிஸ்துவின் சபையானது தனக்களிக்கப்பட்ட ஆத்தும ஆதாயத் திட்டத்தை சிறப்பாகவும், முழுமையாகவும் நடத்த வேண்டுமானால், எப்போதும் குற்றங் கண்டுபிடிக்கும் குணத்தை விட்டு விட்டு, ஒருவருக்கொருவர் அன்பினும், நற்செயல்களிலும் ஊக்கமாக வளர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**Fay Hwak** ஃபே ஹாக்.

---

## உலா வரும் ஒளியின் தூதர்கள் (?)

# யெகோவா சாட்சிகள் (10)

### ஆத்துமாவைக் குறித்த சத்தியத்தை மறுதலிக்கும் கூட்டம் :

நமது கடந்த இதழில் மனிதன் முழுமையான ஆத்துமாவாக இருக்கிறான். ஆனால் எந்த மனிதனும் ஆத்துமாவைக் கொண்டிருப் பதில்லை என்னும் யெகோவா சாட்சிகளின் போதனைகளைக் கண்டோம். இது குறித்த அவர்கள் சில வசனங்களைக் காட்டி "ஆத்துமா" என்னும் பதம் முழு மனிதனைக் குறிக்கிறது என வாதிடலாம். ஆனால் "ஆத்துமா" என்னும் பதம் முழு மனிதனை மட்டும் குறிக்காமல் மனம், உணர்வுகள் மற்றும் தெரிவு செய்யும் சித்தத்தையும் கொண்ட அடித்தளத்தைக் குறிப்பது எனக் கண்டோம்.

"நம்முடைய முதல் மனுஷனாகிய ஆதாம், "ஜீவ ஆத்துமாவாக இருந்தான்" என்பதை யெகோவா சாட்சியினர் போதிக்கின்றனர். மேலும், ஏதோ நிழலாட்டமாக, காணாததும் (கண்ணுக்குப்

புலப்படாத) மிகவும் இலேசானதுமான ஒரு பொருள் அவனுக்குள் இருந்து அவன் மரிக்கும்போது அவன் சரீரத்திலிருந்து தப்பிப்போய் ஆவிக்குரிய ரீதியில் தொடர்ந்து ஜீவிக்கும் என்பதும், இதுவே கண்ணுக்குப் புலப்படாத ஆத்துமா என்றும் கூறலாகாது" என்கின்றனர். (பொய்யுரையாத தேவனின் சில காரியங்கள், பக்கம் 140) பிறகு அதே புத்தகத்தில் பக்கம் 141-ல், முடிக்கும் போது, "..... . மேற்குறித்த இவைகள் அனைத்தும் "ஜீவ ஆத்துமா" என்பது மனித சரீரத்திற்குள் கொடுக்கப்பட்ட ஒன்றல்ல, மாறாக ஒவ்வொரு ஆத்துமாவும் முழு மனிதனையே குறிப்பதாகும்" என்று அவர்கள் வாதிடுகின்றனர். ஆத்துமா என்னும் பதம் ஒரு தனிப்பட்ட முழு மனிதனை மட்டும் குறிக்காமல், அது மனிதனுக்குள் கொடுக்கப்பட்ட ஒன்றுதான் என்பதை நிரூபிக்கும் சில வசனங்களைக் காண்போம்.

யோபு. 14 : 22 -ல், யோபு கூறும்போது, "அவன் மாம்சம் அவனிலிருக்குமளவும் அதற்கு நோவிருக்கும்; அவன் ஆத்துமா அவனுக்குள்ளிருக்குமட்டும் அதற்கு துக்கமுண்டு என்றான்." (யோபு 14 : 22).

சுனேமிய ஸ்திரீ எலிசாவினிடத்தில் வந்தபோது, " . . .அவன் காலைப் பிடித்துக் கொண்டாள்; அப்பொழுது கேயாசி, அவளை விலக்கிவிட வந்தான்; தேவனுடைய மனுஷன்: அவளைத் தடுக்காதே; அவள் ஆத்துமா துக்கமாயிருக்கிறது . . . என்றான். (2 இராஜா. 4 : 27) இதிலிருந்து நாம் வேதாகம வார்த்தைகளை எடுத்துக் கொள்வதா அல்லது யெகோவா சாட்சியினரின் கற்பனைகளையா? அவர்களின் புரட்டுப் போதனையை தேவன் நியாயந்தீர்ப்பார்.

இதுபோல அநேக வசனங்களைக் கொண்டு மேலே கூறியவைகளை நிரூபிக்கலாம். ஆனால் வேதாகமத்தின் தெளிவான கோணத்தை இவர்கள் புரிந்து கொள்ள மறுப்பது வேடிக்கை.

யெகோவா சாட்சியினருக்குப் போதிக்கிற ஒரு மனிதனை சில மாதங்களுக்கு முன் சந்தித்தேன். எங்களுடைய விவாதத்தின்போது, அவர் என்னிடத்தில் "பாவத்தின் சம்பளம் மரணம்" என்று ரோமர். 6 : 23 -ல் கூறியிருப்பதால், "நரகம் என்பது அத்துடன் கொடுக்கப்படும் போனஸா?" என்று கேட்டார். அவர் சொல்லும் கருத்தை மற்றொரு வார்த்தையில் சொன்னால், ஒரு மனிதன் மரித்தால், அவன் பாவியாக மரித்தால், அந்த மரணத்தோடு அவனுடைய முழுக்கதையும் முடிகிறது. அவர் உயிர்த்தெழவே மாட்டான். இதுவே வேதாகமத்தில் "நரகம்" என்று அழைக்கப்படுகிறது. மரணத்திற்கு மேல் நரகம் என்று ஒன்று அவனுக்குத் தனியாகக் கொடுக்கப்படுவதில்லை, என்கிறார். நான்

அவரைக் கேட்டேன், யெகோவா சாட்சியினர் ஒவ்வொருவரையும் கேட்டுக்கொண்டிருக்கிறேன், "நம்முடைய கர்த்தராகிய இயேசு, '. . . அங்கே அவர்கள் புழு சாவாமலும், அக்கினி அவியாமலிருக்கும்' என்று கூறியது பொய்யா? (மாற்கு. 9 : 43 - 48)

மேலும் அவர்களின் மனுஷனாகிய ரூத்தர் போர்டு, ". . . . . மரித்தவர்களுக்கு ஒன்றுமே தெரியாது." (அதாவது மயக்கத்தில் இருப்பார்கள்) என்கிறார். அதற்கு சங். 6 : 5 ஐயும், பிரசங்கி. 9 : 10 போன்ற வசனங்களையும் பயன்படுத்தி அப்படிக் கூறினார். அதே நேரத்தில் அவருடைய மனிதர்களே, மரித்தவர்கள் உயிர்த்தெழுவார்கள் என்றும் போதிக்கின்றனர். அவர்களுக்குள்ளாகவே ஏராளமான குளறுபடிகள், அப்படியிருக்கும்போது, அவர்களிடத்தினின்று எப்படி சத்தியத்தை நாம் எதிர்பார்க்க இயலும்?

மறுபுறத்தில் பிலிப்பியர் 1 : 21 -23-ல் பவுல் கூறும்போது, "சாவு எனக்கு ஆதாயம்" என்கிறார். மயக்கத்திலிருக்கும் (மரித்த) கிறிஸ்தவனுக்கு சாவு எந்த வகையில் ஆதாயமாகும். வச. 23-ல் பவுல் கூறும்போது, "தேகத்தை விட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனே கூட இருப்பது அதிக நன்மையாயிருக்கும்" என்கிறார். லூக். 16-ல் ஐசுவரியவானும், ஆபிரகாமும் ஒருவருக்கொருவர் உரையாடிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். வெளி. 6:9-10-ல், தேவ வசனத்தினிமித்தம் சொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்கள், மகா சத்தமிட்டு பூமியின் மேல் குடியிருக்கிறவர்களிடத்தில், தங்கள் இரத்தத்தைக் குறித்து கர்த்தர் நியாயத்தீர்ப்பு செய்யாமலும், எதுவரைக்கும் பழி வாங்காமலுமிருப்பார் என்று கதறுவதாகக் காண்கிறோம். மரித்தவர்கள் மயக்கமுற்றிருந்தால், மாக சத்தமிட்டு அவர்கள் கூப்பிடுவது எப்படி?

மேற்குறித்த அனைத்து நிரூபணங்களிலிருந்தும், தேவனே உண்மையானவர், அவருடைய வசனமே சத்தியம் என்பதையும் யெகோவா சாட்சிகளின் போதனைகள் சுத்தப் பொய்யேயல்லாது வேறொன்றுமில்லை என்ற முடிவுக்கும் தான் நம்மால் வரமுடிகிறது.

**(தொடர்ந்து 'நரகம்' என்பது குறித்து அடுத்த இதழில் வாசிப்போம்).**

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20, DECE 1995
DECE 1995, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -: வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :-

“திருமறை ஆசான்” வாசகர்கள் பட்டியலை மாவட்ட வாரியாக ஒழுங்கு படுத்தும் பணி நடந்து கொண்டுள்ளது. தொடர்ந்து எங்கள் மாத இதழைப் படித்துப் பயன் பெற விரும்புவோர், ஓர் அஞ்சல் அட்டையில் (Post-Card) தெளிவான முகவரியுடன் உங்கள் விருப்பத்தை எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

பதில் வரும் வாசகர்களுக்கு மட்டுமே வரும் புத்தாண்டிலிருந்து “திருமறை ஆசான்” அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்

Published by Church of Christ, Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK - POST

If undelivored Please return to
The Editor phone : (04257) 20030
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701